பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 15 ஞாயிற்றுக்கிழமை 29.05.2022 கதிர் 98

## ரணில் இன்று விசேட உரை!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு இன்று விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

நாட்டின் தற்போதைய ☞2

## காணாமல்போன குடும்பப்பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு!

### கொலையா? தற்கொலையா? பொலிஸார் தீவிர விசாரணை

காணாமல்போன குடும்பப் பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாத்தளை மாவட்டம், கலேவெல பொலிஸ் பிரிவில் வீடொன்றுக்கு அருகிலுள்ள கிணற்றிலிருந்து குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான ஆர்.எம்.பத்மலதா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்றுமுன்தினம் இரவு முதல் காணாமல் போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் அருகில் உள்ள வீட்டுக்குச் செல்கிறேன் என கூறி வீட்டை விட்டுச் சென்றிருந்தார் என்று உயிரிழந்த பெண்ணின் கணவர், பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். ☞2

## சிறுமி ஆயிஷா கொலை; விரைவில் நீதி கிடைக்கும்

### ஜனாதிபதி கோட்டாபய நம்பிக்கை





பண்டாரகம - அட்டுலுகமவில் சிறுமி பாத்திமா ஆயிஷா அக்ரம் கொல்லப்பட்ட சம்பவத்தில் விரைவில் நீதி கிடைக்கும் எனத் தாம் உறுதியளிக்கிறேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர் இதனைப் பதிவிட்டுள்ளார். ஈவிரக்கமற்ற முறையில் ☞2

## முடியாவிட்டால் விலகிடுவேன்!

### ரணில் அதிரடி அறிவிப்பு



நாட்டை என்னால் நிமிர்த்த முடியாவிட்டால் பிரதமர் பதவியிலிருந்து விலகிச் சென்றிடுவேன்.

-இவ்வாறுபிரதமர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்தார். ☞2

### நெல்லியடி நகரப் பகுதியில்

## வீடுடைத்துத் திருடிய பெண் உள்ளிட்ட இருவர் சிக்கினர்!



யாழ்., வடமராட்சி, நெல்லியடியில் வீடொன்றை உடைத்து நகைகள் மற்றும் அலைபேசி உள்ளிட்ட பெறுமதியான பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் பெண் உள்ளிட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள வீடொன்றைப் பட்டப்பகலில் உடைத்து நகைகள் மற்றும் அலைபேசி உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயிருந்தன.

சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் காங்கேசன்துறை பிராந்தியத்துக் ☞2

## ரணிலுக்குச் சகலரும் ஒத்துழைப்பு வழங்குக!

### சம்பிக்க வேண்டுகோள்



பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் விடயங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்துள்ளார். ☞2

### '21' திருத்தச் சட்டமூலம் தொடர்பில்

## ஆளுங்கட்சியினருக்குள் முரண்பாடு; கோட்டாபய நாளை முக்கிய சந்திப்பு!

அரசமைப்பின் உத்தேச 21ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் நாளையும் முக்கிய சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதன்படி சிறிலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாளை மாலை சந்தித்துப் ☞2

## நாட்டில் நாளாந்தம் 2,500 பேர் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பம்





இலங்கையில் நாளாந்தம் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு 2 ஆயிரத்து 500 பேர் வரை முன்பதிவு செய்கின்றனர் என்று குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. ☞2

## ஒக்ரோபர் மாதமளவில் அரிசிக்குத் தட்டுப்பாடு!

### சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே எச்சரிக்கை

தவிர்க்க முடியாத வகையில் இந்த வருடம் ஒக்ரோபர் மாதமளவில் நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என்று பேராதனைப் பல்கலைகழகத்தின் விவசாய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே தெரிவித்தார்.



இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுபோகம் தற்போது பாதியளவு நிறைவடைந்து விட்டது. போதுமான அளவு இரசாயன உரம் இதுவரையில் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. இந்த முறை 3 லட்சத்து 15 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப் பில் சிறுபோகம் இடம்பெறு கின்றது. வழமையாக சுமார் ☞2

## ஆளுங்கட்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேச்சு நடத்தவுள்ளார். 21ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் மொட்டுக் கட்சிக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்றம் வருவதைத் தடுக்கும் ஏற்பாட்டை மொட்டுக் கட்சியின் நிறுவுநரான பஸில் ராஜபக்ஷவின் சகாக்கள் எதிர்க்கின்றனர்.

இந்நிலையிலேயே ஆளுங் கட்சிக்குள் ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

## காணாமல்போன.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மறுநாள் காலை வரை மனைவி வீடு திரும்பாத காரணத்தால், வீட்டுக்கு முன்னால் உள்ள பாதுகாப்பற்ற கிணற்றுக்கு அருகில் மனைவியின் காலணி இருப்பதைக் கண்டு, கிராம மக்களுடன் சேர்ந்து கிணற்றில் தேடினேன் என்றும் கணவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொலையா? அல்லது தற்கொலையா? அல்லது வேறு ஏதாவது காரணமா? என்பது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சிறுமி ஆயிஷா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொல்லப்பட்ட சிறுமி பாத்திமா ஆயிஷாவின் குடும்பத்தினருக்குத் தமது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, சிறுமி பாத்திமா ஆயிஷா அக்ரம் கொல்லப்பட்டமை இதுவரையில் மர்மமாக உள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய தகவல்கள் எவையும் இதுவரையில் கிடைக்கவில்லை.

எனினும், இன்று இடம்பெறுகின்ற மரண பரிசோதனையின் பின்னர் பல தகவல்கள் வெளியாகும் என விசாரணைகளை மேற்கொள்ளும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

சிறுமியின் கொலை தொடர்பான விசாரணைகளுக்காகத் தற்போது 3 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் குறித்த பகுதியில் உள்ள பலரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

பண்டாரகம - அட்டுலுகமவைச் சேர்ந்த சிறுமி பாத்திமா ஆயிஷா அக்ரம் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

9 வயதான குறித்த சிறுமி நேற்று முன்தினம் முதல் காணாமல் போயிருந்தார்.

நேற்றுமுன்தினம் முற்பகல் தமது வீட்டிலிருந்து 250 மீற்றர் தொலைவில் உள்ள கடைக்குச் சென்ற குறித்த சிறுமி மீண்டும் வீடு திரும்பியிருக்கவில்லை.

பின்னர் அவரது பெற்றோர் பொலிஸாரிடம் முறைப்பாடளித்தனர்.

பொலிஸாரால் சி.சி.ரி.வி. காணொலி காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டதோடு அதிலிருந்து கடைக்குச் சென்று சிறுமி வீடு திரும்பும் காட்சிகள் பெறப்பட்டன.

எனினும், சிறுமியின் வீட்டிலிருந்து 150 மீற்றர் தொலைவில் எந்த சி.சி.ரி.வி. காணொலிக் காட்சிகளும் காணப்படவில்லை எனப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்தநிலையில் நேற்று பிற்பகல் சிறுமி பாத்திமா ஆயிஷா அக்ரம், அவரது வீட்டுக்கு அருகில் உள்ள சதுப்பு நிலம் ஒன்றில் சடலமாக மீட்கப்பட்டார்.

பின்னர் ஹொரணை பதில் நீதிவான் மற்றும் நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று நீதிவான் பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதையடுத்து சிறுமியின் சடலம் மரண பரிசோதனைகளுக்காக பண்டாரகம வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்தநிலையில் இன்று மரண பரிசோதனை இடம்பெறவுள்ளது.

## ரணில் இன்று........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசியல், பொருளாதார நிலைமைகளை விளக்கும் வகையில் இன்று மாலை 6.45 மணிக்கு இந்த உரை இடம்பெறவுள்ளது எனப் பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## நாட்டில் நாளாந்தம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதுவரையான காலங்களில் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டால் தற்போதே அதிகமான கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அதிக எண்ணிக்கையிலானோர் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு வருகின்றமையால் பத்தரமுல்லையில் நாளாந்தம் கடுமையான வாகன நெரிசல் ஏற்படுகின்றது.

## ஒக்ரோபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
4 லட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் சிறுபோகம் இடம்பெறும்.

சிறுபோகத்துக்காக 80 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் அவசியமாகின்றது.

எனினும், தற்போது நாட்டில் இரசாயன உரத்துக்கான தட்டுப்பாடு நிலவுவதோடு அதிக விலைக்கு உரம் விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறான பின்னணியில் இந்த முறை சிறுபோக விளைச்சல் 50 சதவீதத்தால் வீழ்ச்சியடையும் - என்றார்.

## முடியாவிட்டால்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

மற்றவர்கள் போல் எனக்குப் பதவி ஆசை இல்லை. நாட்டின் நலன் கருதியே பிரதமர் பதவியை ஏற்றேன். அதேவேளை, ஜனாதிபதியின் வேண்டுகோளின் பிரகாரம் நிதி அமைச்சையும் பொறுப்பேற்றேன்.

நான் உறுதியளித்தது போன்று அனைத்து விடயங்களையும் நேரடியாகவே கண்காணித்து வருகின்றேன். சர்வதேச நாடுகளின் முக்கியஸ்தர்களுடனும், உதவிகள் வழங்கும் சர்வதேச நிறுவனங்களுடனும் பேச்சு நடத்தி வருகின்றேன்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பிலும், எதிர்கால நிலைமை குறித்தும் உண்மைத் தகவல்களையே நான் வெளியிட்டு வருகின்றேன்.

எனது கருத்துக்கள் தொடர்பில் எவரும் பதற்றம் அடையத் தேவையில்லை. நாட்டை நிமிர்த்துவதே எனது குறிக்கோள். இதை என்னால் செய்ய முடியாது போனால் பிரதமர் பதவியிலிருந்து விலகிச் சென்றிடுவேன் - என்றார்.

## நெல்லியடிப்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்டக் குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்தநிலையில் 28 வயதுடைய ஆண் ஒருவரும், 20 வயதுடைய பெண் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஐ போன் ஒன்றும், ஐ பாட் ஒன்றும், 6 கிராம் எடையுடைய தோடுகளும் மற்றும் 35 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக் கப்பட்டுள்ளனர்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு –**
**தொலைபேசி இலக்கம்–**
**076 443 8622**

## ரணிலுக்கு சகலரும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
43ஆம் படையணியின் தலைவரான பாட்டலி சம்பிக்க ரணவக்க தென்னிலங்கை ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடும்போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் 2001ஆம் ஆண்டில் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது ரணில் விக்கிரமசிங்கவால் அதனை வெற்றிகொள்ள முடிந்தது. இம்முறையும் அவர் அதனை வெற்றி கொள்வார் என்ற நம்பிக்கை உண்டு.

அதற்கு அனைவரும் பிரதமர் ரணிலுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இன்னும் இரண்டு மாதங்களுக்குள் இந்த நெருக்கடிகள் தீராது போனால் நாடு முழுவதும் பாரிய எதிர்ப்பு வெடிக்கும் என்றும் சம்பிக்க ரணவக்க எம்.பி. எச்சரித்துள்ளார்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முறைகேடுகளுக்கு முடிவு

அரசமைப்பின்படி, மக்கள் தங்களது இறைமையை வெளிப்படுத்தும் தேர்தல்கள் மூன்று. ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல், சர்வஜன வாக்கெடுப்பு. இலங்கையின் தற்போதைய அரசமைப்பு 1978 இல் நடைமுறைக்கு வந்தபோது மாகாண சபை முறைமை இங்கு இல்லை. அது பின்னால் பத்து ஆண்டுகள் கழித்து – 1978 இல் – வந்தது. எனினும் மாகாண சபை தேர்தலும் மக்களின் இறைமையை வெளிப்படுத்தும் ஒரு வாக்களிப்புத்தான் என உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பு ஒன்றில் விவரித்து இருக்கின்றது.

இவற்றைத் தவிர்த்து இன்னொரு முக்கிய தேர்தலும் உண்டு. அது உள்ளூராட்சி மன்றத் தேர்தல். மக்களின் இறைமையை அது வெளிப்படுத்துவதாக கருதப்படுவதில்லை ஆனால் ஜனநாயகத்தை – மக்கள் பிரதிநிதித்துவ முறையை – அடி மட்டத்தில், கிராமிய ரீதியில், செழுமைப்படுத்தும் உயரிய முறையாக அது கணிக்கப்படுகின்றது.

ராஜபக்ஷக்களின் அரசு தேர்தல்களை இலக்கு வைத்து தன்னுடைய கோணங்கிப் புத்தியினால் அந்த உள்ளூராட்சி நிர்வாக முறைமையையும் நாசமாக்கி இருக்கின்றது. அது இப்போது வெள்ளை யானையைக் கட்டி தீனி போடும் விவகாரமாக மாற்றப்பட்டுள்ளது.

'ஏழு மூளை தந்திரசாலி' என போற்றப்பட்ட(?) பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சராக இருந்தபோது, உள்ளூராட்சி சபைகள் பல தமது கட்சியின் கீழ்மட்ட அங்கத்தினர்களின் கைகளில் இருந்தமையால், அவர்களைத் தமது கைகளில் போட்டு தமது கட்சி கட்டமைப்பு பிடியில் வைத்திருப்பதற்காக சில தந்திரோபாயங்களைச் செய்தார்

இலங்கை முழுவதும் உள்ள 24 மாநகரசபைகள், 41 நகரசபைகள், 275 பிரதேச சபைகளினதும் – அதாவது மொத்தம் 340 உள்ளூராட்சி சபைகளினதும் – 4,917 பிரிவுகளுக்கும் அல்லது வட்டாரங்கள் – ஒவ்வொன்றுக்கும் 40 லட்சம் ரூபா என்ற என்ற கணக்கில் அபிவிருத்தியின் பெயரால் நிதி ஒதுக்கீடு செய்தார் அவர். இதன் மொத்த செலவினம் சுமார் 2,000 கோடி ரூபா.

அது தவிரவும். கிராமிய அபிவிருத்தி என்ற பெயரில் 8,500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது 2022 க்கான வரவு – செலவுத்திட்டத்தில் அப்போதைய நிதி அமைச் சர் பஸில் ராஜபக்ஷவினால் உரிய திட்ட ஒழுங்குகள், பொறுப்புக்கூறல் கடப்பாடுகள், நிதி நிர்வாக விதிமுறைகள் இன்றி உள்ளூராட்சி மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த நிதி ஒதுக்கீடுகள் பெரும் முறைகேடுகள் மற்றும் ஒழுங்கீனங்களுக்கு வழி வகுத்துள்ளன என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் ஒரு வருடம் நீடிக்கப்பட்டிருக்கும் நிலையில், வெள்ளை யானையைக் கட்டி தீனி போடும் விவகாரமாகவும், பெரும் ஊழல் மோசடிகளுக்கு இடமளிக்கும் மையங்களாகவும் மாற்றியமைக்கும் இந்த விடயங்களே பிரதான காரணம் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

அடுத்த இரண்டு வருடங்களுக்கு மக்களின் நிவாரணத்திற்கே முன்னுரிமை. அபிவிருத்தி அதன் பின்னர்தான் என்று நெருக்கடி கால கொள்கை வகுப்பு முடிவை எடுத்திருக்கும் ரணிலின் அரசு இப்படி ஊழல் மோசடிகளுக்கு வழி வகுத்திருக்கும் திட்டங்களை உடனடியாக அடியோடு நிறுத்துவதற்கும் முடிவு செய்திருக்கிறது.

அடுத்த ஆறு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்படவிருக்கும் புதிய இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் இந்த வீண் விரய செலவு திட்டங்கள் முழுமையாக வெட்டப்பட்டிருக்கும் என்பது வரவேற்கத்தக்க விடயம்தான்.

# பொலிஸார் தமது பொறுப்புக்களை சட்டரீதியாக நிறைவேற்ற வேண்டும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு



பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை அவர்கள் சட்ட ரீதியாக நிறைவேற்ற வேண்டும் என்பதோடு, அவ்வாறு செயற்படும் அனைவரது பாதுகாப்பையும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் உறுதிப்படுத்த வேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை – சுஹுரு பாயவில் அமைந்துள்ள பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சில் உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன உள்ளிட்ட சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமைகளில் ஈடுபடும் போது எதிர்கொள்ளும் நடைமுறை சட்ட சிக்கல்கள் தொடர்பில் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியாத பாரிய நெருக்கடிகள் ஏற்படும் போது, முப்படையினரின் உதவியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் இதன் போது ஆலோசனை வழங்கினார்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இந்த வருடம் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த வருடத்தில் மொத்தமாக 24 ஆயிரத்து 942 டெங்கு நோயாளர்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டிருந்தனர். எனினும் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 23 ஆயிரத்து 118 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# மற்றுமொரு டீசல் கப்பல் இன்று இலங்கை வருகிறது!

டீசலை ஏற்றிக்கொண்டு மற்றுமொரு கப்பல் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நாட்டை வந்தடைய உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குவந்துள்ள மசகு எண்ணெய்யை கப்பலில் இருந்து இறக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல முனையங்களில் தற்போதுள்ள எரிபொருள் இருப்புக்கள் தொடர்பிலும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்;

17 ஆயிரத்து 77 மெற்றிக் தொன் டீசல், 1,072 மெற்றிக் தொன் சூப்பர் டீசல், 92 பெற்றோல் – 37,391 மெற்றிக் தொன், 95 பெற்றோல் – 6,142 மெற்றிக் தொன், ஜேரிஏ1 எரிபொருள் – 2,437 மெற்றிக் தொன் இருப்பதாக கூறினார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசல் மற்றும் பெற்றோல் விநியோகம் தொடரும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.



# வவுனியா, முல்லைத்தீவினைச் சேர்ந்த 7 வீர வீராங்கனைகள் இந்தியாவிற்கு!

ஸ்ரீலங்கா மிக்ஸ் பொக்சிங் அமைப்பின் ஊடாக இந்தியாவில் இடம்பெறவுள்ள உலக கிண்ண மிக்ஸ் பொக்சிங் போட்டிக்கான தெரிவுப்போட்டியில் பங்கேற்பதற்காக வவுனியா மற்றும் முல்லைத்தீவை சேர்ந்த 7 வீர வீராங்கனைகள் இந்தியாவிற்கு சென்றுள்ளனர். வெள்ளிக்கிழமை ஆரம்பமான போட்டிகள் எதிர்வரும் 30ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. குறித்த போட்டியில் வெற்றிபெறும் வீர வீராங்கனைகள் உலக மிக்ஸ் பொக்சிங் சங்கத்தினூடாக 3 மாத பயிற்சியை பெற்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இடம்பெறவுள்ள உலக கிண்ண போட்டியிலும் பங்கேற்கவுள்ளனர்.

# உக்ரைனுக்கு ஆயுதங்கள் விநியோகம்; பிரான்ஸ்– ஜேர்மனி நாடுகளுக்கு ரஷ்ய அதிபர் புடின் எச்சரிக்கை

உக்ரைனுக்குஆயுதங்கள்விநியோகம் செய்வதை நிறுத்த வேண்டும் என்று பிரான்ஸ், ஜேர்மனிக்கு ரஷ்ய அதிபர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய போர் 3 மாதங்களை கடந்து நீடித்து வருகிறது. இந்த போருக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

ரஷ்ய படைகளின் தாக்குதல்களை சமாளிக்க உக்ரைனுக்கு ஆயுதங்களை அமெரிக்கா, மேற்கத்திய நாடுகள் வழங்கி உதவி வருகின்றன.

இதனால் ரஷ்ய படைகளுக்கு உக்ரைன் வீரர்கள் கடும் சவால் அளித்தனர். உக்ரைன் தலைநகர் கிவ், கார்கிவ் உள்ளிட்ட முக்கிய நகரங்களை ரஷ்யாவால் கைப்பற்ற முடியவில்லை.

தற்போது கிழக்கு உக்ரைனை கைப்பற்ற ரஷ்யா தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் உக்ரைனுக்கு ஆயுதங்கள் விநியோகம் செய்வதை நிறுத்த வேண்டும் என்று பிரான்ஸ், ஜேர்மனிக்கு ரஷ்ய அதிபர் புடின் எச்சரிக்கை விடுத் துள்ளார்.


பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மெக்ரான், ஜேர்மனி பிரதமர் ஓலர் ஷோல்ஸ் ஆகியோரிடம் ரஷ்ய அதிபர் புடின் தொலைபேசியில் பேசினார்.

அப்போது உக்ரைனுக்கு ஆயுதங்கள் விநியோகிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து புடின் அதனை உடனே நிறுத்த வேண்டும் என்றும் இல்லையென்றால் மேற்கத்திய நாடுகளின் நிலைமை மேலும் சீர்குலையும் என்றும் எச்சரிக்கை விடுத்தார். மேலும் ரஷ்யா மீதான பொருளாதார தடைகளை நீக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதுகுறித்து ரஷ்ய அதிபர் மாளிகையான கிரெம்ளின் கூறும்போது, உக்ரைன் துறைமுகங்களில் சிக்கியுள்ள தானியங்களை தடையின்றி ஏற்றுமதி செய்ய ரஷ்யா தயாராக இருப்பதாக பிரான்ஸ், ஜேர்மனி தலைவர்களிடம் புடின் தெரிவித்தார்.

உலக சந்தைகளுக்கு தானியங்களை வழங்குவதில் உள்ள சிரமங்களுக்கு மேற்கத்திய நாடுகளின் தவறான பொருளாதார மற்றும் நிதிக்கொள்கைகளே காரணம் என்றும் புடின் தெரிவித்தார்.

இவ்வாறு கிரெம்ளின் மாளிகை தெரிவித்தது. பிரான்ஸ் அதிபர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், தானிய ஏற்றுமதியை அனுமதிக்க உக்ரைனின் ஒடேசா துறைமுகம் மீதான முற்றுகையை கைவிடுமாறு ரஷ்யாவிடம் பிரான்ஸ், ஜேர்மனி தலைவர்கள் வலியுறுத்தினர்.



உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியிடம் நேரடியாக பேச்சு நடத்த வேண்டும். உடனே போர் நிறுத்தத்தை அறிவித்து ரஷ்ய படைகளை திரும்ப பெற வேண்டும் என்று புடினிடம் வலியுறுத்தினர். மேலும் மரியுபோல் நகரத்தில் உள்ள உருக்காலையில் இருந்து போர் கைதிகளாக பிடிக்கப்பட்ட 2,500 உக்ரைன் வீரர்களை விடுவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.



## கூட்ட நெரிசலில் சிக்கி நைஜீரியாவில் 31 பேர் சாவு

நைஜீரியா நாட்டின் தென்கிழக்கே உள்ள போர்ட் ஹார்கோர்ட் நகரில் கிங்ஸ் அசெம்பிளி கிறிஸ்தவ ஆலயம் அமைந்துள்ளது. இதில் நடந்தநிகழ்ச்சிஒன்றில்நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

ஆலயத்தில் உணவு வழங்குகிறார்கள் என பரவிய தகவலை தொடர்ந்து, சிறிய வாசல் வழியே அனைவரும் முண்டியடித்துக் கொண்டு செல்ல முயன்றனர். அப்போது, கூட்டநெரிசல்ஏற்பட்டுபலர்சிக்கிக்கொண்டனர். அவர்களில் பலர் சிறுவர் சிறுமிகள் ஆவர்.

இதுதொடர்பாக, மாகாண பொலிஸாரின் பெண் செய்தி தொடர்பாளர் இரிங்கே–கோகோ கூறுகையில், கூட்ட நெரிசல் ஏற்படும்போது, உணவு வழங்கும் திட்டம் தொடங்கவில்லை. கதவு மூடப்பட்டு இருந்த போதிலும், நிகழ்ச்சி நடந்த பகுதியில் கூட்டத்தினர் கட்டுக்கடங்காமல் புகுந்தனர்.

கூட்ட நெரிசலில் சிக்கி 31 பேர் உயிரிழந்து உள்ளனர். 7 பேர் காயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உள்ளனர் என தெரிவித்தார்.

## எரிபொருள் விலை உயர்வுக்கு இம்ரான்கான் அரசே காரணம்

### பிரதமர் பாஸ் ஷெரீப் தெரிவிப்பு



பாகிஸ்தான் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. இம்ரான்கான் பிரதமராக இருந்தபோது பாகிஸ்தானுக்கு கடன் வழங்குவதாக கடந்த 2019ம் ஆண்டு சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எவ்.) அறிவித்தது. ஆனால், இந்த ஆண்டு தொடக்கத்தில், இம்ரான்கான் பெற்றோல், டீசல் விலையை குறைத்தார். அதனால் அவற்றுக்கான மானியமாக அரசுக்கு மாதத்துக்கு 60 கோடி டொலர் செலவானது. இதனால், சர்வதேச நிதியம், கடன் திட்டத்தில் மீதி தொகையான 300 கோடி டொலரை நிறுத்தி வைத்துவிட்டது. தற்போதைய சூழலில் சர்வதேச நிதியத்தின் நிபந்தனையால் பாகிஸ்தானில் பெற்றோல், டீசல் விலை லீற்றருக்கு தலா ரூ.30 அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் பிரதமராக பதவி ஏற்ற பிறகு முதன்முறையாக நாட்டு மக்களுக்கு பாஸ் ஷெரீப் உரையாற்றினார். அப்போது, பெற்றோல் உள்ளிட்ட எரிபொருள்கள் விலை உயர்த்தப்பட்டது குறித்து பேசியதாவது:

நாட்டிற்கு மிகப் பெரிய கடனை வைத்துடன் சர்வதேச நாணய நிதியத்துடன் பாதகமான உடன்படிக்கையையும் இம்ரான் கான் அரசு மேற்கொண்டது. உண்மைகளை அப்பட்டமாகப் புறந்தள்ளிவிட்டு இம்ரான் கான் அரசு செயல்பட்டது.

நாட்டின் பொருளாதார நலன் கருதி பெற்றோலியப் பொருள்களின் விலை கடுமையாக உயர்த்தப்பட்டன. கனத்த இதயத்துடன் வேறு வழியின்றியே இந்த உயர்வு அமுல்படுத்தப்பட்டது.

எரிபொருள்கள் மீதான விலை உயர்வால் ஏழை, நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதால், அதை சரிகட்ட வரும் பட்ஜட் அறிக்கையில் அவர்களுக்கு மாதம் தோறும் ரூ.2,000 வழங்குவதற்கு ஏற்ப ரூ.7,211 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என தெரிவித்தார்.

## பிரேஸிலில் நிலச்சரிவு 30 பேர் பரிதாபச் சாவு



பிரேஸில் நாட்டின் வடகிழக்கு பகுதியில் கடந்த சில நாள்களாக தொடர் கனமழை பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது வடகிழக்கு பிரேஸிலின் பெர்னாம்புகோ மாநிலத்தில் சனிக்கிழமை பெய்த கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் குறைந்தது 28 பேர் உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். 760 க்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். மற்றொரு மாநிலமான அலகோவாஸில், ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இரண்டு பேர் இறந்தனர். நிலச்சரிவு மற்றும் வெள்ள அபாயம் உள்ள பகுதிகளில் சுமார் 32,000 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

வீடுகளை இழந்தவர்களுக்காக ரெசிப் நகரில் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. அலகோவாஸில், கடந்த சில நாள்களாக பெய்த கனமழை பாதிப்புகள் காரணமாக 33 நகராட்சி பகுதிகளில் அவசரநிலையை அறிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளம், நிலச்சரிவால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடா மீட்புக்குழுவினர், ராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# எந்த மொழியையும் திணிக்கவோ எதிர்க்கவோ கூடாது இந்தியத் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு உரை



மாற்றுக்கருத்துகள் இருந்தாலும், கருணாநிதியின் செயல்பாடுகளை வியப்போடு பார்த்துள்ளேன், என இந்திய துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு தெரிவித்திருக்கிறார். கலைஞர் கருணாநிதி சிலை திறப்பு விழாவில் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

நேற்று சென்னையில் நடந்த நிகழ்வில் கலந்துகொண்ட இந்திய துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, கலைஞர் சிலையை திறந்து வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நாட்டின் மிகச்சிறந்த பேச்சாளர்களில் ஒருவர் கலைஞர் கருணாநிதி. அடக்கப்பட்ட ஒடுக்கப் பட்ட மக்களுக்காக உழைத்தவர். இந்தியாவின் பெருமை மிக்க முதல் அமைச்சர்களில் கலைஞரும் ஒருவர்.

என் இளம் வயதில் கலைஞரின் உரையால் ஈர்க்கப்பட்டிருக்கிறேன். கருணாநிதி சிறந்த நிர்வாகத்திறமை கொண்டவர். அவர் கைது செய்யப்பட்ட போது ஜனநாயகத்திற்காக வாதாடினேன். கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் தமது தரப்பு கருத்தை முன்வைப்பதில் கலைஞர் தனித்திறன் கொண்டவர். பன்முகத்தன்மை அர்ப்பணிப்பு, உழைப்பு என பல்வேறு ஆற்றல் நிறைந்தவர் கருணாநிதி.

அரசியல் பதவி முள்கிரீடம் என்று கூறியவர் கருணாநிதி. தமிழ் சினிமாவின் புதிய அத்தியாயத்தை எழுதியவர். சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது, என்ற குறள் கலைஞருக்கு பொருந்தும். தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் வளர்த்தவர் கருணாநிதி. மாற்றுக் கருத்துகள் இருந்தாலும், கருணாநிதியின் செயல் பாடுகளை வியப்போடு பார்த்துள்ளேன்.

மாநிலங்கள் வளர்ச்சி அடைந்தால் நாடு வளர்ச்சி அடையும். நாட்டின் வளர்ச்சிக்காக மத்திய மாநில அரசுகள் இணைந்து பணியாற்ற வேண்டும். தாய் மொழியே இதயத்தின் உணர்வுகளை சரியாக வெளிப்படுத்தும். வேற்றுமையில் ஒற்றுமையே நமது நாட்டின் சிறப்பு. இந்தியாவின் பன்முகத்தன்மையை ஏற்று அங்கீகரிக்க வேண்டும். எந்த மொழியையும் திணிக்கக் கூடாது, மற்ற மொழிகளை எதிர்க்கக் கூடாது. தேவை என்றால் எவ்வளவு மொழியை வேண்டு மானாலும் கற்றுக் கொள்ளலாம், என்று வெங்கையா நாயுடு தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

## மராட்டியத்தில் முதல் முறையாக ஒமிக்ரோன் புதிய வகை தொற்றால் ஏழு பேர் பாதிப்பு




தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகளில் கடந்த மாதம் கொரோனாவின் புதிய வகை மாறுபாடுகள் கொண்ட ஒமிக்ரோன் தொற்றால் பலர் பாதிக்கப்பட்டனர்.

புதியவகைக் கொரோனாத் தொற்றுப் பரவாமல் தடுக்க பல முன்னேற்பாடுகள் இந்தியாவிலும் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் புதிய வகை ஒமிக்ரோன் தொற்றால் மராட்டியத்தில் முதல் முறையாக 7 பேர் பாதிக்கப்பட்டனர் என தெரியவந்துள்ளது.

கடந்த 4 ஆம் திகதி முதல் 18 வரையான காலப்பகுதியில் பெறப்பட்ட மாதிரிகளை பகுப்பாய்வு செய்ததில் ஒமிக்ரோன் பி.ஏ.4 வகை மாறுபாட்டால் நான்கு பேரும், பி.ஏ.5 வகை மாறுபாட்டால் மூவரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாநில சுகாதாரத்துறை அதி காரி ஒருவர் தெரிவித்தார். புதிய வகை மாறுபாட்டால் பாதிக் கப்பட்டவர்களில் இரண்டு பேர் தென்னாபிரிக்கா, பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்குச் சென்று திரும்பியவர்கள் என்றும், மூவர் கேரளா, கர்நாடகா மாநிலங்களுக்குப் பயணித்துள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஓமந்தூரார் தோட்டத்தில் கருணாநிதி சிலை திறந்துவைத்தார் இந்தியத் துணை ஜனாதிபதி







சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்கப்படும் என்று சட்டசபையில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். அத்தோடு கருணாநிதியின் பிறந்த நாளான ஜூன் மூன்றாம் திகதி இனி அரசு விழாவாக கொண்டாடப்படும் என்றும் அறிவித்தார்.

அதன்படி ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவம னையின் முன்புறம் அண்ணாசாலை ஓரத்தில் கலைஞர் கருணாநிதியின் சிலை நிறுவ இடம் தேர்வு செய்யப்பட்டது. அந்த இடத்தில் பொதுப்பணித்துறை சார்பில் 12 அடி உயர பீடத்தில் 16 அடி உயரத்தில் கருணாநிதி சிலை நிறுவப்பட்டுள்ளது. 1.7 கோடி ரூபா மதிப்பில் அந்த முழு உருவ வெண்கலச் சிலை தயாரிக் கப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இந்தச் சிலை திறப்பு நிகழ்ச்சியில் இந்தியத் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, அமைச்சர்கள், சபாநாயகர் அப்பாவு, நாடாளு மன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள், கலைத் துறைப் பிரபலங்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

# நேபாளத்தின் பொக்காராவிலிருந்து 19 பயணிகளுடன் சென்ற தாரா ஏர் நிறுவனத்தின் விமானம் மாயமானது

## 4 இந்தியர்கள் பயணம்?




பொக்காராவிலிருந்து ஜோம்சோமுக்கு இன்று காலை 9.55 மணிக்கு புறப்பட்ட விமா னம் மாயமாகி உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. நான்கு இந்தியர்கள் உட்பட 19 பயணிகளை ஏற்றிச் சென்ற நேபாள விமானம், இன்று காலை கட்டுப்பாட்டு அறை யின் தகவல் தொடர்பை இழந்ததாக விமான நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ள னர்.

தாரா ஏர் நிறுவனத் தின் 9 NAET இரட்டை இன்ஜின் விமானம், தலைநகர் காத்மண் டுவில் இருந்து வடமேற்கே 200 கி.மீ. தொலைவில் உள்ள பொக்ராவிலிருந்து, வடமேற்கில் 80 கி.மீ. தொலைவில் உள்ள ஜோம்சோம் நகருக்கு காலை 9.55 மணி யளவில் புறப்பட்டது. சிறிது நேரத்தில் விமா னம் கட்டுபாட்டு அறை உடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில், காணாமல் போன விமானத்தில் நான்கு இந்தி யர்கள் மற்றும் மூன்று ஜப்பானியர்கள் இருந்தனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மீதமுள்ளவர்கள் நேபாள குடிமக்கள் மற்றும் விமானத்தில் பணியா ளர்கள் உள்பட 19 பயணிகள் இருந்தனர் என்றும் தகவல் வெளியாகி உள்ளது. ஜோம் சோம் விமான நிலையத்தின் ஏடிசியின் படி, கடைசியாக தொடர்பில் இருந்த பகுதி களுக்கு ஹெலிக்கொப்டர் ஒன்று அனுப்பப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்கிழக்குப் பல்கலையில் நடந்த சர்வதேச ஆய்வரங்கு






(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பத்தாவது சர்வதேச ஆய்வரங்கு கடந்த புதன்கிழமை பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் – அரபு மொழி பீடத்தின் கேட்போர் கூடத்தில் உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் தலைமையில் 'சமகால சவால்களை எதிர் கொள்வதற்கான பல்துறைசார் ஆய்வு' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.

இவ்வாய்வரங்கில் சர்வதேச மற்றும் தேசிய பேரா ளார்கள் பலரும் கலந்துகொண்டனர். பல்துறை யினையும் ஊடறுத்துச் செல்லும் சுமார் 60 இற்கு மேற் பட்ட ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வரங்கில் சமர்ப்பிக் கப்பட்டன.

ஆய்வரங்கின் இணைப்பாளர் பேராசிரியர் ஏ. ஜெளபர் இம்மகாநாட்டை நெறிப்படுத்தினார். பல் கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸின் தொடக்க உரையும் அங்காரா இல்டின் பயாசிட் பல் கலைக்கழக பேராசிரியர் பாதிஹ் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் செய்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹபீபுல் ஹொங்கர் ஆகியோர் மகாநாட்டின் பிரதான உரைகளையும் நிகழ்த்தினர்.

சமகாலத்தில் உலகம் எதிர்கொள்ளும் நெருக்க டிகளுக்குபல்துறைசார்ஆராய்ச்சிஅணுகுமுறையினை கையாள்வதன் அவசியம், உலகமயமாதல் செயன் முறையில் ஏற்பட்டுவரும் புதிய மாற்றங்கள் குறித்தும் இவர்களது உரைகள் கவனம் செலுத்தியிருந்தன. தொடக்க நிகழ்வில் ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட கட்டுரைகளின் சுருக்கங்கள் அடங் கிய தொகுப்பு நூல் மின்னியல் இதழாக வெளியிட்டு வைக்கப்பட்டது. பேராளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தரம்வாய்ந்த கட்டுரைகளை சர்வதேச எமரல்ட் நிறுவ னத்தின் அனுசரணையுடன் வெளியிட்டுவைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மகாநாட்டின் இறுதி அமர்வில் கலை கலாசார பீடத்தின் தலைவர் பேரா சிரியர் எம்.எம். பாஸில் தொகுப்புரையை நிகழ்த்தி னார்.

ஆய்வரங்கின் ஏற்பாட்டுக் குழு சார்பில் அதன் செயலாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.எம். றிப்தி, பொருளாளர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா, ஏனைய குழு அங்கத்தவர்களும் பங்கேற்றிருந்தமையுடன் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், துறைத்தலைவர்கள், பதிவாளர், நிதி யாளர், சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



## மட்டு. மாலையர்கட்டு கிராமத்தில் இறந்த யானையின் உடல் மீட்பு

மட்டக்களப்பு – மாலையர்கட்டு கிராமத்தின் வயல் பகுதியில் உயிரிழந்த நிலையில் காட்டு யானை ஒன்றின் உடல் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

வன ஜுவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் வெல் லாவெளி சுற்று வட்டாராக் காரியாலயத்தின் உத்தியோகஸ் தர்கள் இதை தெரிவித்தனர்.

வயற்பகுதியில் யானை ஒன்று வீழ்ந்து கிடப்பதாக அப்பகுதி பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து அங்கு விரைந்து சென்ற வன ஜீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் யானை உயிரிழந்து கிடப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

உயிரிழந்த யானை தொடர்பில் நீதிமன்ற உத்தரவைப் பெற்று பிரேத பரிசோதனை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மட்டக்களப்பில் கௌரவிப்பு

(க.கிருபாகரன்)



2020 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களைக் கற்பித்த ஆசிரியர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு கல்வி வலயத்தினால் அலுவலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திரு மதி சுஜாதா குலேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு மதி உமாபதி விவேகானந்தன் மற் றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கள், ஆசிரிய ஆலோசகர்கள், வலய உத்தியோகஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



இதன்போது மட்டக்களப்பு கல்வி வலயம் அகில இலங்கை ரீதியில் இரண்டாவது இடத்தைப் பெறுவதற்கு காரணகர்த்தாக் களாகச் செயற்பட்ட ஆசிரியப் பெருந்தகைகள் பாராட்டுச் சான் றிதழ் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

## பரீட்சையில் ஆள்மாறாட்டம்; கைதான இருவருக்கும் பிணை

பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்ட இரு சந்தேகநபர்களுக்கும் கல்முனை நீதிவான் நீதிமன்று பிணை வழங்கியுள்ளது.

அம்பாறை – கல்முனை வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் சிங்கள மொழி மூலம் சமயபாட பரீட்சைக்கு 32 வயதுடைய தனிப்பட்ட பரீட்சார்த்தியின் அனுமதி அட்டையை பாவித்து, அவருக்கு பதிலாக ஆள்மாறாட்டம் செய்து 21 வயது நபர் பரீட்சைக்குத் தோற்றிய போது பிடிபட்டார் எனக் கூறப் படுகின்றது.

சம்பந்தப்பட்ட இரு சந்தேகநபர்களும் கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் இரண்டு நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இந்த வழக்கு கல்முனை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், இருவருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

## வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'பல்ஸர்' மோ. சைக்கிள் தீயிட்டு எரிக்கப்பட்டது



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட் டார்சைக்கிளுக்குதீவைத்துஎரிக்கப்பட்டசம்பவமொன்று இன்று தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் பதி வாகியுள்ளது. முள்ளிப்பொத்தானை–ஹிஜ்ரா நகர் பகுதியில் வசித்து வரும் முஹம்மட் பரீட் என்பவருடைய 'பல்ஸர் 150' ரக மோட்டார் சைக்கிளுக்கே வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் தீ வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஏற்கனவே இருவருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு தீ வைக்கப்பட்டமைக்கான காரணம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் தம்பலகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை பிற்போடுவதற்கான வாய்ப்புகள் இல்லையாம்!



## அமைச்சர் தினேஷ் குணவர்தன திட்டவட்டம்

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலை பிற்போடுவதற்கான வாய்ப்புகள் இல்லை என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்ளூராட்சி நிறுவகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி குறித்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் பேசப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மத்தியவங்கியின் சுயாதீனச் செயற்பாடுகளுக்கு அரசு என்றும் பூரண ஒத்துழைப்பை வழங்கும்!

### ஆளுநருக்கு ஜனாதிபதி உறுதி



மத்திய வங்கியின் செயற்பாடுகளை சுயாதீனமாக முன்னெடுத்துச் செல்வதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் அரசாங்கம் வழங்கும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

மத்திய வங்கி ஆளுநர் மற்றும் நிதிச் சபையின் உறுப்பினர் சஞ்சீவ ஜயவர்தன உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி மாளிகையில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

குறுகிய காலத்துக்குள் நிதி நெருக்கடிகளை சமாளிப்பதற்கும், நாட்டை சுமுகமான நிலைமைக்கு இட்டுச் செல்வதற்கும் மத்திய வங்கி ஆளுநர் முன்னெடுத்து வரும் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி இதன் போது பாராட்டுக்களைத் தெரிவித்தார். பொருளாதாரத்துறையிலுள்ள நிபுணர்களின் பங்குபற்றலுலுடன் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சுகள் வெற்றிகரமாக நிறைவடையும் என்று எதிர்பார்க்கிறேன் என மத்திய வங்கி ஆளுநர் இதன்போது தெரிவித்தார். பணவீக்கத்தைக் குறைத்தல் மற்றும் பொருளாதாரத்தை பலப் படுத்தல் என்பவற்றுக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக இதன் போது ஜனாதிபதிக்கு தெளிவு படுத்தப்பட்டது.

அரசியல் தலையீடுகள் இன்றி இந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பை வழங்குவேன் என இதன்போது ஜனாதிபதி உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.



## யாழ். தபாலகத்துக்கு முன்னுள்ள சுற்று வட்டத்தை அழகுபடுத்தும் செயற்றிட்டத்துக்கு அடிக்கல் நாட்டல்!

(கலையமுதன்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ளபிரதமதபாலகத்திற்குமுன்பாகவுள்ள சுற்று வட்டத்தை மீளமைத்து அழகுபடுத்தும் செயற்றிட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

ரில்கோ தனியார் விடுதியின் உரிமையாளர் திலகராஜின் நிதிப் பங்களிப்பில் மீளவும் புனரமைக்கப்படவுள்ள சுற்றுவட்டத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) நண்பகல் 12 மணியளவில் இந்நிகழ்வு நடைபெற்றது.

சுற்று வட்டத்தின் நடுவே திருவள்ளுவரின் சிலை நிறுவப்பட்டு அப்பகுதி அழகுபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தூயநகரம் அழகிய மாநகரம் என்ற தொனிப்பொருளில் யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்றிட்டத்தில் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட சுற்றுவட்டங்களை அழகுபடுத்தும் செயற்பாட்டின் நீட்சியாக இது மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், ரில்கோ தனியார் விடுதியின் உரிமையாளர் திலகராஜ், யாழ்.மாநகர ஆணையாளர் ஜெயசீலன், மாநகரசபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## யாழ். பல்கலையில் இணைப் பேராசிரியர் ஒருவர் பேராசிரியராகப் பதவி உயர்வு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இணைப் பேராசிரியர் ஒருவர் திறமை அடிப்படையில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

விஞ்ஞான பீடத்தின் தாவரவியற் துறையைச் சேர்ந்த இணைப் பேராசியர் பி.செவ்வேள் தாவரவியலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்படுவதற்கு பல்கலைக்கழகப் பேரவை சனிக்கிழமை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று (சனிக்கிழமை) காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த இணைப் பேராசியர் பி. செவ்வேளின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, தாவரவியற் துறையைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் பி. செவ்வேள் தாவரவியலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

## 20 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நாட்டில் மூடப்படும் அபாயத்தில்?

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக சுமார் 20 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்படும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் டபிள்யூ. எஸ்.எஸ். பெர்னாண்டோ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நாடு மிகவும் பாரதூரமான நிலைமையை எதிர்நோக்கி வருவதாகவும், இதனால் விநியோகஸ்தர்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அம்பாந்தோட்டை, மரதன்கடவல, கெக்கிராவ, கதிரான மற்றும் அக்குரஸ்ஸ ஆகிய ஐந்து எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் 24 மணி நேரமும் முழு பாதுகாப்பை வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், எனினும் பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இன்னும் அந்த பாதுகாப்பைப் பெறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## யாழ். சர்வதேச விமான நிலையத்தை மூடுவதற்கு இலங்கை அரசு தீர்மானம்?

யாழ்.சர்வதேச விமான நிலையத்தை மூடுவதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொரோனா பரவலைத் தொடர்ந்து கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்த விமான நிலையத்தின் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்தநிலையில் தற்போது நிலவி வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக யாழ்.சர்வதேச விமான நிலையத்தை மூட அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் இது தொடர்பான எந்தவொரு உத்தியோகப்பூர்வ அறிவித்தல்களும் இதுவரை வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அளவுக்கு அதிகமாக மின்சாரத்தை பயன்படுத்துவோரின் கட்டணத்தில் திருத்தம்

அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்துவோரின் மின்சார கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பாரியளவில் மின்சாரத்தை பயன்படுத்தும் தொழிற்சாலைகள், கட்டடங்களின் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதற்காக அமைச்சரவை மற்றும் இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.05.2022இல் வெளியிடப்பெற்றது.